மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பு மாற்று தினம் நிகழ்ச்சியினை தலைமையேற்று நடத்தி, கொடையாளர்களின் குடும்பத்தினருக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னை பெருநகர காவல்துறை இணை ஆணையர் அபிஷேக் திக்சித், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், பேராசிரியர் மரு.ரேலா, கர்நாடகம், தெலுங்கானா, அந்தமான் நிக்கோபர், புதுச்சேரி ஆகிய மாநிலங்களைச் சார்ந்த உறுப்பு மாற்று ஆணையத்தின் அலுவலர்கள், மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மருத்துவத்துறை பேராசிரியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில்

# நடப்பாண்டில் 35 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டம்!

## தொகுதி வளர்ச்சி திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

திண்டுக்கல்,செப். 25-

ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் நடப்பாண்டில் 35 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டமிட்டிருப்பதாக தொகுதி வளர்ச்சி திட்ட பணிகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுடன் ஆய்வு செய்தார். பின்பு ரூ.1.53 கோடி மதிப்பிலான நலத் திட்டங்களை வழங்கினார்.

ஆய்வு கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி தலைமை வகித்தார்.ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பாக உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் சந்தேகங்கள் மற்றும் கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்கள் விளக்கம் அளித்தனர்.

ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, அத்திட்டங்கள் அனைத்தும் கடைகோடி மக்களையும் சென்றடையும் வகையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

**பெண்களின் முன்னேற்றம்!**

பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் வாழ்வினை வளப்படுத்திடும் பொருட்டும், குடும்பத்தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்துள்ளார். இத்திட்டத்தில் 1.06 இலட்சம் மகளிர் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான தொகை அவர்களுடைய வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப்பெறாதவர்கள் தகுதியிருப்பின் கூடுதல் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும், விண்ணப்பிக்காதவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கவும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தை 10 ஆண்டுகளில் குடிசை இல்லா மாநிலமாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். அதற்காக ஏழை, எளிய வீடு இல்லாத மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு, பல்வேறு திட்டங்களின் கீழ் வீடு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகம் முழுவதும் 100 இடங்களில் விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, பஞ்சமி நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் கண்டறியப்பட்டு ஆதிதிராவிடர் மக்களுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே கட்டப்பட்டு பழுதடைந்த தொகுப்பு வீடுகளை பராமரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒட்டன்சத்திரத்தில் 500 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு, கீரனூரில் 500 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்ட நடவடிக்கை மேற்கொண்ணப்பட்டு வருகிறது. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில்தான் நமக்கு நாமே திட்டத்தில் அதிக எண்ணிக்கையில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்ற தொகுதிக்கு காவிரி நீர் ஆதாரத்தைக்கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ.1000 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. 180 இடங்களில் மேல்நிலைத் தொட்டிக்கள் கட்டப்பட வுள்ளன. அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் வரும் 30 ஆண்டு காலங்களுக்கு இங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது. அந்த வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் சுற்றுப்பகுதி ஊராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை ஒரு இடத்தில் குவித்து, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தரம் பிரித்து, அந்த குப்பைகளை மறுசுழற்சிக்கு பயன்படுத்தும் விதமாக உரங்கள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 48 ஊராட்சிகளில் சேகரமாகும் குப்பைகளை ஒரு இடத்தில் குவித்து, உரம் தயாரிப்பு பணிகள் மேற்கொள்ள இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**வடிகால் பணிகள் சீரமைப்பு!**

மழை காலம் துவங்கியுள்ளதால், அனைத்துப் பகுதிகளிலும் வடிகால்களை சீரமைத்து தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக துப்புரவு பணிகள் மேற்கொண்டு, பிளீச்சிங் பவுடர் தெளித்து சுகாதாரத்தை பாதுகாக்க வேண்டும். மருத்துவ முகாம்கள் நடத்திட வேண்டும்.

"நாம் மரத்தை வளர்த்தால், மரம் நம்மை வளர்க்கும்" என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னபடி, தமிழகத்தில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகிறது. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 6 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 35 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு 16 வகையான மரக்கன்றுகள் வேளாண்மைத்துறை மூலம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நமது வருங்கால சந்ததியினருக்கு சுகாதாரமான காற்றை சுவாசிக்க வழிவகை ஏற்படுத்தப்படுகிறது.

ஆறு, குளங்களில் நிலத்தடி நீர் வளத்தை பாதிக்கும் சீமைக்கருவேல மரங்கள் தொடர்ந்து அகற்றப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் தங்கள் பகுதியில் உள்ள நீர் நிலைகளில் சீமைக்கருவேல மரங்களை கண்டறிந்து அவற்ற அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சாலையோர வியாபாரிகளுக்கான ஆதரவு திட்டத்தில் 41 பயனாளிகளுக்கும், 16 பூ வியாபாரி களுக்கும், 26 உணவு வியாபாரிகளுக்கும் என மொத்தம் 83 பயனாளிகளுக்கு ரூ.61.00 இலட்சம் மதிப்பிலான உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.51.00 இலட்சம் மதிப்பில் 7 முதல் நிலை குப்பை சேகரம் வாகனங்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன. மயானம் ரூ.41.10 இலட்சம் மதிப்பீட்டில் எரிவாயு மயானமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.1.53 கோடி மதிப்பீட்டிலான அரசின் திட்டங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர், சாலை வசதி, தெருவிளக்கு, சுகாதாரம் போன்ற அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றிட இந்த அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், பொதுமக்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், நம்பிக்கையை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்கான பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை செயல்படுத்தி வருகிறார். உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஒன்றிணைந்து அரசின் திட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே தெரியப்படுத்தி அரசின் திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடையும் வகையில் செயலாற்ற வேண்டும். இதன்மூலம் தமிழகம் மேன்மை அடையும்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

### "உடல் உறுப்புகள் கொடை கொடுப்போருக்கு அரசு மரியாதை!"

# மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணம் நம் முதலமைச்சர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப். 25-

உடல் உறுப்புகளைக் கொடையாகக் கொடுப்போருக்கு, அரசு மரியாதை அளிக்கப்படும் என்று நமது 'திராவிட மாடல்' அரசின் முதலமைச்சர் அறிவித்திருப்பது மற்ற மாநிலங்களுக்கு முன்னு தாரணமானது & மாமனித நேயம் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பல விபத்துகள் காரணமாக மூளைச்சாவு அடைந்து உயிருக்குப் போராடும் நோயாளிகளின் முக்கிய உடல் உறுப்புகள் வாழும் மற்றவர்களுக்கு பயன்படுத்தப்பட்டு மற்ற மனிதர் வாழ்வில் ஒரு புதுயுகத்தை, புது வாழ்வை ஏற்படுத்த உதவிடும் பெற்றோர்களை அரசும் நாமும் எப்போதும் பாராட்டி நன்றி கூறி வருகிறோம்.

அப்படித் திடீரென்று இத்தகைய நிலைக்குள்ளாகும் இளைஞர்கள் மற்றும் பலரது உறுப்புகளை மறுபயன் மூலம் மனித வாழ்வுக்கு ஒரு புதுத் திருப்பம் ஏற்படுத்தப்படுவது உண்மையான தொண்டறம் ஆகும்!

அப்படி தங்களது உறுப்புக் கொடை மூலம் உண்மை மனிதநேயத்தின் உருவமாகும் அவர்களது இறுதி நிகழ்வு அரசு மரியாதையுடன் செய்யப்படும் என்று நமது திராவிட மாடல் அரசின், முதலமைச்சர் சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மானமிகு மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு, ஓர் எடுத்துக்காட்டான மாமனித நேயமாகும்!

அரசு மரியாதை அத்தகையவர்களுக்கு என்பது, ஒரு புதுத் திருப்பமாகும்.

**மனித மாண்பைப் போற்றும் செயல்!**

தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சி என்பது, ஒரு தனித் தன்மையான, சாமான்யர்களையும் சமூகத்தில் முக்கிய மாமனிதர்களாக மதித்து, அவர்களது தியாகத்தை, மனித மாண்பை, உயர்த்திடும் ஆட்சி என்பதை இதன் மூலம் உலகுக்கே சீரிய அறிவிப்பின் மூலம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வுகள் நடந்திருக்குமாயின் அக்குடும்பத்தின் பின்வரும் பல தலைமுறைகள், இதனை மறக்காது, மனித சமூகத்திற்குப் மேலும் பலவாறு தொண்டாற்றத் தூண்டும் வகையில், ஒரு நற்சான்றிதழினை அக்குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படுதல் மேலும் அவர்களைப் பெருமைப்படுத்தி, நன்றி கூறும் அரிய செயலாக அமையும்! அரசும் மருத்துவத் துறையும் யோசிக்குமாக.

தந்தை பெரியார் கூறும் மானிடப் பற்றுக்கு இந்த உடல் உறுப்புக் கொடை சரியான எடுத்துக்காட்டு.

**இதர மாநிலங்களுக்கு முன்னுதாரணம்!**

ஜாதி, மதம், இனம், நாடு முதலிய பலவற்றையும் தாண்டி "மனிதம்" என்பது தான் பொதுவாக அறிவியல் ரீதியானது; சமூக நலம் சார்ந்தது என்பதை விளக்குவதே, குருதிக் கொடை விழிக்கொடை மற்றும் உறுப்புக் கொடைகளின் உள் அமைதி கொண்டுள்ள தத்துவங்கள்.

நமது முதலமைச்சர் இதிலும், இந்தியாவின் இதர மாநிலங்களுக்கும் ஒரு புதுமையான வழியைச் சுட்டிக் காட்டியுள்ளார்!

தமிழ்நாடு, இப்போது பலருக்கும் கற்றிடம் வெற்றிடமல்ல. கற்றிடம் என்று பறைசாற்றுவோம்.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மதுரை மாவட்டம் – மேலூரில்

# கழக மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்! அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்பு!

மதுரை. செப். 25-

மதுரை வடக்கு மாவட்டம் மேலூரில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக மூத்த முன்னோடிகளுக்கு கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிய பின் அமைச்சர் பி.மூர்த்தி குறித்து கீழ் கண்டவாறு புகழ்ந்து பேசினார், அதன் விவரம்

அமைச்சர் மூர்த்தி அவர்கள் தொடர்ந்து ஒரு வருட காலமாக இளைஞர் அணியின் மாநாட்டை மதுரையில் நடத்த வேண்டும் என்று என்னை வற்புறுத்திக் கொண்டிருந்தார், அதேபோல் கழக தலைவரிடமும் இதே கோரிக்கை வைத்துக் கொண்டிருந்தார், இளைஞர் அணி முதல் மாநாடு நெல்லையில் நடைபெற்றது இரண்டாவது மாநாடு மதுரையில்தான் நடத்த வேண்டும் என வற்புறுத்தினார், ஆனால் தலைவர் அவர்கள் மதுரையில் வேண்டாம் இம்முறை சேலத்தில் நடத்த கட்டளையிட்டார், ஆனால் கிட்டத்தட்ட அதற்கு ஈடாக ஒரு மாநாடு போல் தற்போது இந்த நிகழ்ச்சியை அவர் ஏற்பாடு செய்துள்ளார். ஒரு நிகழ்ச்சியை எவ்வளவு பிரம்மாண்டமாகவும், யாரும் முகம் சுளிக்காத வகையில் எடுத்தபடியே நேர்த்தியுடன் நடத்துபவரே அமைச்சர் மூர்த்தி. நான் ஏற்கனவே கூறியது போல் முதல் முதலில் பொற்கிழி வழங்கியது இங்குதான், இன்றைக்கு பொற்கிழி மட்டுமல்ல பூத் கமிட்டியில் இயக்கத்திற்காக கழகப் பணியாற்றுபவர்களுக்கு நிதி உதவியும் அமைச்சர் வழங்கி உள்ளார். அண்ணனுக்கு சொந்த ஊர் மதுரை ஆனால் நான் எங்கு சென்றாலும் அங்கு என்னை நலம் விசாரிக்க வந்து விடுவார், அந்த அளவுக்கு என் மீது அன்பும், பாசமும் கொண்டவர் தான் அமைச்சர் மூர்த்தி. பல பேரை நான் மரியாதையாக அண்ணன் என்று கூப்பிடுவேன் ஆனால் மூர்த்தி அவர்களை நான் அண்ணன் அண்ணன் என்று கூப்பிடுவது உண்மையான பாசத்தினால், எனக்கு உடன் பிறந்த ஒரு அண்ணன் இருந்திருந்தால் அவர் என்னை எப்படி கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொள்வாரோ, கடிந்து கொள்வாரோ, அது போன்று என்னை பார்த்துக் கொள்வார்.

கிளைச் செயலாளராக கழக பணி ஆரம்பித்து, ஒன்றிய செயலாளராக, இன்று மாவட்ட கழக செயலாளராகவும் சிறப்பான அமைச்சராகவும் பொறுப்புக்கு வந்து தலைவர் இட்ட பணியை சிறப்பாக ஆற்றிக் கொண்டிருப்பவர்தான் அமைச்சர் மூர்த்தி. நான் பலமுறை சொல்லி இருக்கிறேன் அமைச்சர் அண்ணன் மூர்த்தி போட்ட விதை தான் பொற்கிழி வழங்கும் நிகழ்வு, அதன் பின் இன்று மாவட்ட கழக செயலாளர்கள், அமைச்சர்கள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், எல்லாம் தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திற்கும் என்னிடம் தேதி கேட்டாலும் எந்த நிகழ்ச்சியானாலும் அதில் ஒரே ஒரு அன்பு கட்டளை வைப்பேன் அது உங்கள் மாவட்டத்திற்கு நான் வந்து எந்த நிகழச்சியில் கலந்து கொள்ள வேண்டுமானாலும் எனக்காக கழகத்துக்காக உழைத்து ரத்தம் சிந்திய மூத்த முன்னோடிகளுக்கு பாராட்டி அவர்களுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியை நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும், அப்படி செய்தால் நான் வருகிறேன் என்று கடந்த இரண்டு ஆண்டுகளாக பல்வேறு மாவட்டங்களில் கிட்டத்தட்ட 30 மாவட்டங்களில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தலைவர் கட்டளை ஏற்று கழக மாவட்டங்களில் கழக மூத்த முன்னாடிகளுக்கு மாவட்ட கழகங்கள் சார்பாக சுமார் 30 கோடி ரூபாய் அளவில் கழக மூத்த முன்னாடிகளுக்கு பொற்கிழி வழங்கி உள்ளோம் இவ்வாறு பேசினார்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# மாணவர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நேர்காணல்!

## மாவட்டக் கழகச்செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது

பெரம்பலூர்,செப்.25-

பெரம்பலூர் மாவட்டத்தில் ஒன்றிய,நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் நடைபெற்றது.

மாவட்ட கழகச்செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நேர்காணலில் மாநில மாணவர் அணி தலைவர் இரா. ராஜீவ் காந்தி, மாநில மாணவர் அணி துணைச்செயலாளர் பி.எம். ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு மனு அளித்தவர்களிடம் நேர்காணல் நடத்தினார்கள்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பா.துரைசாமி, மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.ப.பரமேஷ் குமார், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர்,ஒன்றிய செயலாளர்கள் ந.கிருஷ்ணமூர்த்தி, வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன்,சோமு.மதியழகன், சி.ராஜேந்திரன், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், துணை அமைப்பாளர்கள் பா.ரினோபாஸ்டின், இளகிருஷ்ணா, தமிழ்வேந்தன், ராகவி அ.இளையராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையம் சார்பில் சென்னையில் உறுப்புதான நிகழ்ச்சி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

சென்னை, செப்.25-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் மற்றும் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்ய திட்டத்தின் ஆண்டு விழா 2023 நிகழ்ச்சியினை தலைமை ஏற்று நடத்தினார்கள். அதன்பிறகு தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்புதான தினம் நிகழ்ச்சியினை தலைமையேற்று நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் திங்கள் 23 ஆம் தேதி 2008 ஆம் ஆண்டுக் குப்பிறகு உறுப்பு தானம் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று உறுப்பு தானம் தினம் மிகச் சிறப்பாக நடைபெற்று இருக்கின்றது. மூளைச்சாவு அடைந்து உறுப்பு தானம் செய்த கொடையாளர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. மேலும் தமிழ்நாடு மாநிலம் உறுப்பு தானம் வழங்குவதில் இந்திய அளவில் முதலிடத்தில் இருக்கின்றது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு உறுப்பு மாற்று மூலமாக ஏராளமானவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். ஆகையால் இன்றைய தேதி வரை உறுப்பு வேண்டி காத்திருப்பவர்கள் சிறுநீரகம் வேண்டி காத்திருப்பவர்கள் 6,179 பேரும், கல்லீரல் வேண்டி காத்திருப்பவர்கள் 449 பேரும், இதயம் வேண்டி காத்திருப்பவர்கள் 72 பேரும், நுரையீரல் வேண்டி காத்திருப்பவர்கள் 60 பேரும், இதயம் மற்றும் நுரையீரல் 24 பேர், கணையம் 1, கைகள் வேண்டி காத்திருப்பவர்கள் 26 பேர் என்கின்ற வகையில் காத்திருக்கின்றனர். ஆகையால் இந்த நிகழ்ச்சியில் உறுப்பு தானம் தினத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மூளைச்சாவு அடைந்தவர்களிடமிருந்து உறுப்புகளை தானமாக பெறுவதற்கு அமைக்கப்பட்ட மூளைச்சாவு அடைந்தவர்களிடம் உறுப்புகளை பெறும் குழு விரைந்து செயல்படுவதன் அவசியம் குறித்தும் இன்றைய நிகழ்ச்சியில் விரிவாக பேசப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

**முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம்**

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் உயர் அறுவை சிகிச்சைகள் தொடர்பான நிகழ்ச்சியும் நடத்தப்பட்டுள்ளது. குறிப்பாக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு காப்பீட்டு திட்டம் பெரிய அளவில் இருக்கின்றது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இந்த துறையில் இன்னொரு மிகச் சிறந்த திட்டத்தினை அறிவித்துருக்கிறார்.

உறுப்பு தானம் தருகிற மூளைச் சாவு அடைந்த உறுப்பு தானம் தந்தவர்களுடைய இறுதி சடங்கில் அரசு மரியாதை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அவர்களது உடலடக்கம் அரசு மரியாதையுடன் செய்யப்படும் என்கின்ற மிகப்பெரிய மனிதாபிமானம் அடிப்படையில் நேற்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். ஆக இந்த செப்டம்பர் மாதம் 23 என்பது மனிதாபிமானத்திற்கும், மனித நேயத்திற்கும் பெரிய உச்சத்தை தொடும் நாளாகும். அந்தவகையில் தமிழ்நாடு முழுவதிலும் இனிமேல் மூளைச்சாவு அடைந்தவர்கள் உடலுறுப்பு தானம் செய்தால் அந்த உடல்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு மரியாதை செய்யப்படவிருக்கிறது. மேலும் அக்டோபர் 2008 முதல் தற்போது வரை மொத்த உறுப்பு கொடையாளர்கள் எண்ணிக்கை 1,726 ஆகும். மொத்த முக்கிய உறுப்பு பயன்பாடுகளின் எண்ணிக்கை 6,327. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடந்த இரண்டரை ஆண்டுகளாக மொத்த உறுப்பு கொடையாளர்கள் 313 பேரும், மொத்த முக்கிய உறுப்பு பயன்பாடு 1,242 என்கின்ற எண்ணிக்கையில் இருக்கின்றது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை தென்காசி மாவட்டம் சார்பில் கீழப்பாவூர் ஒன்றியம் குறும்பலாபேரி ஊராட்சியில் வைத்து சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் துவக்க விழா,புதிய பார்வை கால்நடை மருந்தகம் மற்றும் பார்வை கிளை நிலையம் துவக்க விழா, ரூபாய்176.7 லட்சம் மதிப்பில் 4 கால்நடை மருந்தகங்கள் திறப்பு விழா நிகழ்வு மாவட்ட ஆட்சியர் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் பங்கேற்று துவக்கி வைத்தார். உடன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தனுஷ் எம் குமார் எம்.பி. பழனி நாடார் எம். எல்.ஏ.உள்பட பலர் உள்ளனர்.